செ.வெ.எண் : 706 2-2/8/10

<u>பத்திரிக்கை செய்தி</u>

## உணவுத்துறை செயலாளர் தலைமையில் திடீர் சோதனை

கடந்த 20.8.2010 ஆம் தேதி இரவு சென்னையிலிருந்து சூளூர்பேட்டை செல்லும் மின்சார ரெயிலில் இரவு 8.30 மணிக்கு உணவுத்துறை செயலாளர் திரு. சுவரன்சிங், இ.கா.ப. அவர்களும் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு. சிவக்குமார், இ.கா.ப. அவர்களும் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை காவல் துறைத் தலைவர் திரு. த.பு. சுந்தரமூர்த்தி மற்றும் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இணை ஆணையாளர் திரு. மகேஸ்வரன், இ.கா.ப. அவர்களும் கூட்டு நடவடிக்கையாக மின்சார ரெயிலில் சென்னையிலிருந்து கும்மிடிபூண்டி வரை சென்று திடீர் சோதனை செய்யப்பட்டது. அதில் 800 கிலோ ரேஷன் அரிசி கைப்பற்றப்பட்டது. இதன் மதிப்பு ரூ. 9,600/- ஆகும். இது சம்பந்தமாக இக்கடத்தலில் ஈடுபட்ட பெண்கள் கலா, வயது 45 க/பெ ஜெயப்பால், ரயில்வே குடிசைப்பகுதி, தடா, ஆந்திர மாநிலம் 2. மஞ்சுளா, வயது 47 க/பெ வாசு, நொச்சிக்குப்பம், ஆரம்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம் 3. வசந்தா, பெண் வயது 40 க/பெ ஏலந்திரன், ரயில்வே குடிசைப்பகுதி, தடா, ஆந்திர மாநிலம் 4. மஞ்சுளா, பெண் வயது 32 க/பெ ஆறுமுகம், ரயில்வே குடிசைப்பகுதி, தடா, ஆந்திர மாநிலம் ஆகியோர் கைது செய்யப்பட்டு கணம் ஜி.டி. நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு புழல் மத்தியச்சிறையில் அடைக்கப்பட்டனர். அதே போல் இன்று 22.8.2010 ஆம் தேதி அதிகாலை ஆரம்பாக்கம் சோதனை சாவடி அருகே குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறையினர் சென்னையிலிருந்து ஆந்திரா நோக்கி செல்லும் பாதையில் லாரி ஒன்றினை மடக்கி சோதனை செய்ய அதில் 40 மூட்டைகள் (மொத்தம் 2000 கிலோ) ரேஷன் அரிசி இருந்தது கண்டறியப்பட்டு லாரியும் மேற்படி ரேஷன் அரிசியும் கைப்பற்றப்பட்டது. இது சம்பந்தமாக ஆந்திர பெண்மணிகள் அமுதா, சாந்தி ஆகியோர் கைது செய்யப்பட்டு புழல் மத்தியச்சிறையில் அடைக்கப்பட்டனர்.

வெளியீடு, இயக்குநா.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

காவல் ஆய்வாளர்
குடிமைப் பொருள் வழங்கல்
குற்றப்புலனாய்வு துறை
சென்னை-600 101.